# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. மதிவாணன் | மதம் | .. இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. சீனிவாசன் | தொழில் | .. பத்திரம் எழுத்தர் |
| வயது | .. 61 | ஜாதி | .. கவராநாயுடு |
| கிராமம் | .. எடப்பாடி | நாள் | .. 03.01.2020 |
| வட்டம் | .. சங்ககிரி | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு/திருமதி என்பவரிடமிருந்து இந்நீதிமன்றத்தில் உதவியாளராகப் பணிபுரியும் திருமதி. செல்வநாயகி என்பவரால் சத்தியப் பிரமாணம் பெறப்பட்டது.

முதல் விசாரணை .. 03.01.2020

அசல் வழக்கு எண் .. 310/2012

வா.சா.4 – மதிவாணன் - நான் எடப்பாடியில் பத்திர எழுத்தராக பணியாற்றி வருகிறேன். கடந்த 7.09.2019-ஆம் தேதி இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்திருந்தது. சம்மனை பெற்றுக்கொண்ட நான் உடல்நலம் சரியில்லாத காரணத்தால், நான் மேற்கண்ட வாய்தா தேதிக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. தற்போது எனது உடல்நலம் சரியாகி இன்று நீதிமன்றத்திற்கு ஆஜராகி உள்ளேன். மேலும், சாட்சியம் அளிப்பதற்கு தயாராக உள்ளேன். சாட்சியம் அளிப்பதற்கு அனுமதி வழங்குமாறு சாட்சியின் கோரிக்கையானது இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்பட்டார்.

எனக்கு என்ன தொழில் என்றால், ஆவணம் எழுதுவதுதான் எனது தொழில். எவ்வளவு காலமாக எங்கு மேற்கண்ட தொழிலை செய்து வருகிறேன் என்றால், கடந்த 40 ஆண்டு காலமாக எடப்பாடியில் ஆவணம் எழுதும் தொழிலை செய்து வருகிறேன். ஆவணம் எழுதுவதற்கு உரிமம் பெற்றுள்ளேனா என்றால், சரிதான். சாட்சியிடம் வா.சா.ஆ.5 ஆவணத்தைக் காண்பித்து இந்த ஆவணத்தை யார் எழுதி, தயாரிக்கப்பட்டது என்று கேட்கப்பட்டது, சாட்சி அந்த ஆவணத்தைப் பார்த்துவிட்டு, நான்தான் எழுதி தயாரித்தேன் என்று கூறினார். இந்த ஆவணத்தை எழுதிக்கொடுத்தவர்

மற்றும் சாட்சிகள் என் முன்னிலையில் கையெழுத்துப் போட்டார்களா என்றால், ஆமாம், நான் ஆவணத்தை எழுதியதற்கு பிறகு என் முன்னிலையில்தான் கையெழுத்துப் போட்டார்கள்.

**1 மற்றும் 5 -ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

வா.சா.ஆ.5 ஆவணத்தை நான் எழுதி, தயாரித்தது சம்பந்தமாக எனது அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் ஆவணங்கள் ஏதேனும் நான் எடுத்து வந்துள்ளேனா என்றால், இல்லை. எனது உரிமம் ஆனது 1984-ஆம் ஆண்டு பெறப்பட்டுள்ளது என்றால், சரிதான். இன்று எனது உரிமத்தை எடுத்து வந்துள்ளேனா என்றால், இல்லை. பத்திரம் எழுதுவதற்குரிய உரிமத்தை எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டும் என்றால், முன்பு ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கவேண்டும். 1990-ஆம் ஆண்டிலிருந்து 5 வருடத்திற்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டும் என்று அரசாணை உள்ளது. இறுதியாக எனது உரிமத்தை எப்போது புதுப்பித்தேன் என்றால், 31.12.2015 ஆம் ஆண்டு புதுப்பித்தேன். பதிவு பெற்ற ஒவ்வொரு பத்திர எழுத்தரும், தாங்கள் என்னென்ன வகையான ஆவணங்களை எந்தெந்த தேதியில் எழுதுகிறோம் என்பதை ஒரு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டியது அவசியம் என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தை நான் எழுதியது சம்பந்தமான பதிவை அதற்குரிய பதிவேட்டில் பதிவு செய்து வைத்துள்ளேனா என்றால், பதிவு செய்து வைத்துள்ளேன். அவ்வாறு பராமரிக்கப்படும் பதிவேட்டை ஒவ்வொரு ஆண்டும், அதற்குரிய சார்பதிவாளரிடம் ஒப்படைத்து, சான்றொப்பம் பெற வேண்டும் என்று சொன்னால், சரிதான். அதேபோல், பத்திரம் எழுதுபவரிடமிருந்து நான் பெறும் கட்டணத்திற்கு இரசீது வழங்கவேண்டும் என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.5-ஐ எழுதியதற்குரிய கட்டணத்திற்கு யார் பெயரில் இரசீது வழங்கியுள்ளேன் என்றால், நியாபகம் இல்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தை எழுதியதை குறித்து வைக்கும் பதிவேட்டையோ, அவ்வாறு எழுதுவதற்கு நான் பெற்ற கட்டணத்திற்குரிய இரசீது புத்தகத்தையோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். சாதாரணமாக நான் எழுதிய ஆவணம் சம்பந்தமாக சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திற்கு வரும்பொழுது அதற்குரிய, என்வசம் உள்ள ஆவணங்களை நீதிமன்றத்திற்கு எடுத்துவரவேண்டும் என்று சொன்னால், சரிதான். ஆனால், எனக்கு சார்வான சம்மனில் குறிப்பிட்டுள்ள 4.2.2009-ஆம் தேதிக்குரிய உயில் சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளபோதும் ,

அதற்குரிய ஆவணங்களை எடுத்து வராததற்கு குறிப்பிடும்படியான காரணம் ஏதேனும் உள்ளதா என்றால், வருடாவருடம் ரெனிவல் பண்ணியதற்கு பிறகு அந்த புஸ்தகங்களை எங்கு வைக்கிறேன் என்று தெரியவில்லை, அதனால், இந்த வழக்கிற்குரிய ஆவணம் எங்கிருக்கிறது என்று தெரியாததால் எடுத்து வரவில்லை. மேற்கண்ட ஆவணங்கள் எனது வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ தான் வைத்திருப்பேன், வேறு எங்கும் வைக்கும் வழக்கம் எனக்கு இல்லை என்று சொன்னால், சரிதான். இவ்வாறு அந்த ஆவணங்களை நான் தேடுவதற்கு முயற்சிகள் ஏதேனும் செய்தேனா என்றால், இல்லை. இவ்வாறு பராமரிக்கப்படும் ஆவணங்கள் ஒவ்வொரு வருடத்திற்கும் தனித்தனியாக பராமரிக்கப்படுமா அல்லது தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுமா என்றால், ஒவ்வொரு வருடத்திற்கும் தனித்தனியாகத்தான் பராமரிக்கப்படும். வா.சா.ஆ.5 ஆவணத்திற்குரிய பதிவை நான் பராமரிக்கும் பதிவேடுகள் மற்றும் இரசீதில் குறிப்பிடப்படவில்லை என்பதால்தான் அதற்குரிய ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், அப்படி ஒன்றும் இல்லை. எனக்கு சார்வு செய்யப்பட்ட அழைப்பாணையில் 3.12.2019-ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், ஆமாம். எனக்கு சார்வான சம்மனை இன்று எடுத்து வந்துள்ளேனா என்றால், இல்லை, வீட்டில் உள்ளது. சாட்சியிடம் இந்நீதிமன்றத்தில் உள்ள சாட்சிய சம்மனை எடுத்துக்காட்டி எனக்கு சார்வு செய்யப்பட்ட சம்மனின் அசல் ஆவணம் இதுதானா என்று கேட்கப்பட்டது, சாட்சி அந்த சம்மனை வாங்கி பார்த்துவிட்டு, ஆமாம் என்று கூறினார். அந்த சாட்சிய சம்மன் நீ.ம.சா.ஆ.2. எனக்கு எந்த தேதியில் சாட்சிய சம்மன் சார்வு செய்யப்பட்டது என்றால், 29.11.2019 -ஆம் தேதி சார்வு செய்யப்பட்டது. எனக்கு எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரை உடல்நிலை சரியில்லாமல் போனது என்றால், 28.11.2019-ஆம் தேதி முதல் 31.12.2019-ஆம் தேதி வரை உடல்நிலை சரியில்லாமல் போனது, சர்க்கரை மற்றும் உயர் இரத்த அழுத்தம் இருப்பதால், அடிக்கடி மயக்கம் வரும். எனக்கு உடல்நலம் சரியில்லாமல் போனதற்கு மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால், எடுத்துக்கொண்டேன். அதற்குரிய ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.5 ஆவணம் குறித்து இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று இதற்கு முன்பு யாராவது என்னிடம் சொன்னார்களா என்றால், இல்லை. இந்த வழக்கில் இன்று வாய்தா போடப்பட்டுள்ளது என்று யார் என்னிடம் தகவல் சொன்னார்கள் என்றால், முதலில் சாட்சி வழக்கறிஞர் தன்னிடம்

கூறியதாக சொல்லிவிட்டு, மீண்டும் தன்னிடம் யார் சொன்னார்கள் என்று நியாபகம் இல்லை என்று சொன்னார். இந்த வழக்கின் வாய்தா தேதியை தெரிந்து கொள்வதற்கு நான் எப்போது, என்ன முயற்சியை எடுத்தேன் என்றால், கிருஷ்ணன் என்ற ஒருவர் இன்று வாய்தா போடப்பட்டுள்ளது, கோர்ட்டிற்கு போய் பார்த்துவிட்டு வாருங்கள் என்று போனில் என்னிடம் சொன்னார். எந்த தேதியில் மேற்கண்ட விபரத்தை என்னிடம் சொன்னார் என்றால், இன்று காலை எனது அலைபேசி எண் 98427 23451 என்ற எண்ணிற்கு அழைத்துப் பேசினார். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சாட்சியசம்மன் வந்துள்ள நிலையில் என்னை அலைபேசியில் கூப்பிட்ட கிருஷ்ணன் என்பவரை யார் என்று எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. யார் என்று எனக்கு தெரியாது, மூன்றாம் நபர் ஒருவர் சொன்னால், நான் நீதிமன்றத்திற்கு வந்து விடுவேனா என்றால், வந்தேன். எத்தனை மணிக்கு, எந்த எண்ணில் இருந்து எனக்கு போன் செய்தார் என்றால், காலை 7.30 மணிக்கு, 75022 10191 என்ற அலைபேசியில் இருந்து என்னை அழைத்திருந்தார். எனது அலைபேசிக்கு மேற்கண்ட கிருஷ்ணன் என்பவரின் அலைபேசியில் இருந்து, இதற்கு முன்பாக அழைப்பு வரவில்லையா என்றால், இல்லை. கிருஷ்ணன் என்பவர் எனக்கு ஏற்கனவே நெருங்கிய நண்பர், அவர் அழைத்ததன் பேரில் இன்று நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால், சரியல்ல. எனது முதன்மை சாட்சியத்தில் வா.சா.ஆ. 5 ஆவணத்தை எழுதிக்கொடுத்தவர் மற்றும் அதில் சாட்சி கையெழுத்துப்போட்டவர்களை எனக்கு முன்பே தெரியும் என்று சொல்லியிருக்கிறீர்கள், அவர்களை எனக்கு எத்தனை ஆண்டு காலமாக, எந்த வகையில் தெரியும் என்றால், பத்திரம் எழுதுவதால், கஸ்டமர் என்ற முறையில் தெரியும், ஆனால், அந்த ஆவணம் எழுதுவதற்கு முன்பாக தெரியாது. உயில் சாசனத்தை எழுதியதாக கூறும், சீரங்காயி அம்மாள் அவர்தான் என்பதை தெரிந்துகொள்வதற்கு என்னென்ன ஆவணங்களைப் பார்த்தேன் என்றால், பட்டா மற்றும் போட்டோவைப் பார்த்தேன். என்ன கிராம பட்டா, எந்த சர்வே எண்ணிற்கு உரியது என்றால், அது நியாபகம் இல்லை. அந்த பட்டாவில் அவரின் பெயர் இருந்ததா என்றால், கூட்டுப்பட்டாவில் இருந்தது. சீரங்காயி அம்மாளை வா.சா.ஆ.5 ஆவணம் எழுதுவதற்கு முன்பாக யார், என்ன என்ற விபரம் தெரியாதா என்றால், ஆமாம், தெரியாது. அந்த தேதியில் தான் முதன்முதலாக பார்க்கிறீர்களா என்றால், ஆமாம். வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களுக்கு உரிய பட்டாதான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பட்டாவா என்றால், சாட்சி அந்த ஆவணங்களான வா.சா.ஆ.1 முதல்

4 ஆவணங்களை வாங்கி பார்த்துவிட்டு, ஆமாம் என்றார். இதேமாதிரியான பட்டாவை பார்த்துவிட்டுத்தான் வா.சா.ஆ 5 ஆவணத்தை எழுதினீர்களா என்றால், இதுபோன்ற ஆவணங்கள் இல்லை, சிட்டாவைப்பார்த்தேன் என்று சாட்சி கூறிவிட்டு, அதன்பிறகு பூர்வீக சொத்துக்கள் என்று சில சர்வே எண்கள் உள்ள கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றை தன்னிடம் கொடுத்ததாகவும், அதைப்பார்த்துத்தான் வா.சா.ஆ.5 உயில்சானத்தை எழுதியதாக சாட்சி கூறுகிறார். எனக்கு பட்டா என்பதற்கும், கிராம நிர்வாக அலுவலர் கொடுக்கும் சான்று என்பதற்கும் உள்ள வித்தியாசம் தெரியுமா என்றால், தெரியும். கிராம நிர்வாக அலுவலர் கொடுத்ததாக கூறும் சான்றில் என்ன எழுதி இருந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால், நியாபகம் இல்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள வாசகங்களை யார் என்னிடம் சொன்னார்கள் என்றால், சீரங்காயி அம்மாள்தான் என்னிடம் சொன்னார், அதன் அடிப்படையில் நான் எழுதினேன். இந்த ஆவணத்தை பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று எழுதியிருக்கிறீர்கள், அதற்குரிய ஆவணங்களைப் பார்த்தேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தில் சாட்சி கையெழுத்துப்போட்டுள்ள இரண்டு நபர்கள் யார் என்று எனக்குத் தெரியுமா என்றால், எனக்குத் தெரியாது. சீரங்காயி அம்மாள் கைரேகை வைக்கும் நபர் என்றால், சரிதான். அவருக்கு எழுதப்படிக்க தெரியுமா என்ற விபரத்தை தெரிந்து கொண்டீர்களா என்றால், தெரியாது. வா.சா.ஆ.5 ஆவணத்தை எழுதும்பொழுது யார் யார் அவருடன் வந்திருந்தார்கள் என்ற விபரத்தையாவது சொல்லமுடியுமா என்றால், தெரியாது. வா.சா.ஆ.5 ஆவணத்தை எழுதுவதற்கு நான் எவ்வளவு ரூபாய் கட்டணம் வாங்கினேன் என்று சொல்ல முடியுமா என்றால், 200 ரூபாய் வாங்கினேன். இவ்வாறு கட்டணம் வாங்கியிருந்தால், அதற்குரிய குறிப்பு, கட்டண இரசீது புத்தகத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் என்றால், சரிதான். நான் எழுதும் ஆவணங்கள் சம்பந்தமாக குறித்து வைக்கப்படும் பதிவேடு மற்றும் கட்டண இரசீது புத்தகமும் நிரந்தரமானது என்று சொன்னால், சரிதான். மேற்கண்ட ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டும் என்ற விதிமுறைகள் ரெஜிஸ்ட்ரேசன் மேனுவலில் (Registration Manual) குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ 5 ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகள் மற்றும் அதில் உள்ள சொத்து விபரங்களின் உண்மை தன்மை குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது, எழுதிக்கொடுத்த நபர் சொன்னதன் அடிப்படையிலேயே அதில் உள்ள வாசகங்கள் என்னால், எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களுக்குரிய பட்டாக்கள் ஆரம்பத்தில்

இருந்தே இந்த வழக்கின் 1-ஆம் பிரதிவாதியான ராமசாமி பெயரில்தான் உள்ளது என்றாலும், ஆனால், கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்றில் சீரங்காயி அம்மாள் பெயரில் மேற்கண்ட சர்வே எண்களுக்குரிய பட்டா கூட்டாக இருந்ததாக நான் உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களில் ஒன்றான கோனேரிப்பட்டி சர்வே எண்ணான 207/21ஏ என்பதற்கு உரிய அடமான கடன் பத்திரத்தை கடந்த 05.08.1985-ஆம் ஆண்டு நான்தான் இந்த வழக்கின் 1-ஆம் பிரதிவாதி ஒரு முத்துக்கவுண்டர் என்பவருக்கு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால், சரிதான். அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1. வா.சா.ஆ.5 ஆவணத்தில் 5ஆம் பக்கத்தில் மேலிருந்து கீழாக 3ஆம் வரியில் கையொப்பம் செய்து என்றுதான் கணிப்பொறி தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். வாதி தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாகவும், மோசடியாகவும் வா.சா.ஆ.5 ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளார் என்றும், தற்போது மேற்படி மோசடி ஆவணத்திற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தில் சீரங்காயி கைரேகை செய்யவும் கிடையாது என்றும், அந்த ஆவணத்தை ஏற்படுத்தவும் கிடையாது என்றும், அவர் கைரேகை செய்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் உண்மையாக ஏற்படுத்தப்பட்டிருந்தால், அதனை நான் பராமரிக்கும் பதிவேட்டில் குறித்திருப்பேன் என்றாலும், அதற்குரிய பதிவேட்டையும், கட்டண ரசீது புத்தகத்தையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், ஆனால், மேற்கண்ட ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்பதால்தான், எனது அலுவலகத்தில் பராமரித்து வரும் மேற்கண்ட ஆவணங்களை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. எனவே, எனது சாட்சியம் சட்டப்படி ஏற்கத்தகுந்தது அல்ல என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம்/மதிவாணன்

ஒப்பம் /திருமதி. மு.பாக்கியம்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.